"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத பாது

# காவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

1964
பங்குனி 1—7
நல்வாசிக
வாரம்

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு மாசி மீ 29-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 9-ம் இல.

# சற்பிரசாத மகாநாட்டுக்கு இந்தியா ஆயத்தமாகிறது

## கர்தினல் கிருசியாசின் மகிழ்ச்சி

உரோமாபுரியிலிருந்து திரும்பியதும் கர்தினல் கிருசியாஸ் பம்பாயில் இவ்வருடமுடிவில் நடக்க இருக்கும் அகிலஉலக சற்பிரசாத மகாநாட்டுக்கு ஆயத்தம்செய்வதில் துரிதமாக உழைத்துவருகின்றார். தாய்நாடுதிரும்பிய கர்தினல் பிரதமர் நேருவுக்குப் பாப்பரசர் தம்மூலம் அனுப்பிய செய்தியைப் புதுடெல்கிக்குக் கொண்டுசென்றார். அங்கே மத்திய அரசாங்க மந்திரிமார் பலரைச் சந்தித்து, மகாநாட்டுக்கு வேண்டிய பல தேவைகளையும் எடுத்துக்காட்டி அவர்களது பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு பெருமகிழ்ச்சியுடன் பம்பாய் நகரம் திரும்பியிருக்கின்றார். அங்குவந்து சேர்ந்ததும் அவர் விடுத்த பின்வரும்செய்தி அவரது மகிழ்ச்சியைப் பிரதிபிம்பிக்கின்றது.

"இவ்வருட முடிவில் பம்பாய் நகரில் நடக்க இருக்கும் அகில உலக சற்பிரசாத மகாநாடானது இந்தியாவுக்கும், பம்பாய்நகருக்கும் தரப்போகும் சிறப்பு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இவற்றையெல்லாம் இந்திய மத்திய அரசாங்கத்தின் மந்திரிமார் நன்குணர்ந்திருக்கின்றார்கள். அவர்கள்வாக்களித்திருக்கும் ஒத்துழைப்பு நமக்குப் பூரணதிருப்தியை அளித்திருக்கின்றது.

சற்பிரசாத மகாநாட்டினல் நமது நாடு அடைய இருக்கும் ஆன்ம நன்மைகளுடன் உலக நன்மைகளும் பல இணைந்திருக்கின்றன. "அன்பில் உமது சீவியத்தை ஒழுங்குபடுத்துங்கள்" என்பது மகாநாட்டின் பிரமாணக்கூற்றுக்களில் ஒன்று. இதுவே கிறீஸ்துநாதரின் போதனைகளின்சாரம். பிறருக்காகத் தம்மைப் பலிகொடுத்த யேசுபிரானின் அன்பை நாம் போதிக்கிறோமென்றிப் பிறிதன்று. நாம் அரசியல் ஆணுவத்தையோ கலாசார கௌரவத்தையோ நோக்கமாகக் கொண்டவர்களல்ல என்பதை இந்நாட்டு மந்திரிமார் நன்கு உணர்வார்கள். மேலும் இந்த மகாநாட்டினல் நமது நாட்டுக்கு உலகநன்மைகளும் பல வந்தடையும். பிறநாட்டுமக்கள் ஆயிரக்கணக்காக வர இருக்கின்றனர். அவர்களின் கலாசாரத் தொடர்பும், நன்மதிப்பும், செல்வச்செறிவும் நமது நாட்டுக்கு நன்மையையே தரும். இப்பெரும் பாக்கியத்துக்காகத் தேவனுக்கு நன்றிகூறி அவரது பராமரிப்பில் இம்மகாநாட்டை ஒப்படைக்கின்றேன். நான் எங்குச் சென்றாலும் பாப்பரசர் இந்தியாவுக்கு வருகின்றாரா? என்று கேட்கின்றனர். மறுமொழியாக அதுபற்றிப் பாப்பரசர் திடமான முடிவுக்கு இன்னும்வரவில்லை என்றே கூறி வருகின்றேன்.

## விரைவில் வத்திக்கான் செல்வார்

### கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்கு

கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்கு அத்தனகோரஸ் அவர்கள் விரைவில் வத்திக்கான் சென்று 6-வது சின்னப்ப பாப்பரசரைத் தரிசிக்க எத்தனித்திருக்கிறார். பாப்பரசரைப்பற்றிப் பேசுகையில் பத்திரியாக்கு அவர்கள் பெரிதும் புகழ்ந்துரைத்தார். "23-ம் அருளப்ப பாப்பரசர் மிகவும் சிறந்தவர். அகில உலக மதிப்புக்கும், கௌரவத்துக்கும் இலக்காகியவர்— அவ்வாறே 6-வது சின்னப்பரும் சிறந்தவராகவும், மதிப்புக்குரியவராகவும் விளங்குவது பெரிதும் சந்தோஷத்தைத் தருகின்றது. குறிக்கப்பட்ட ஒற்றுமை இலக்கை நாம் விரைவில் அடைவோம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. பழைய குறைகளையும், பிழைகளையும் நாம் மறந்துவிடவேண்டும். 6-வது சின்னப்பர் ஜெருசலேமுக்கு யாத்திரிகராய் வந்ததுடன் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியிருக்கின்றது" என்றார். 25 கோடி மக்களின் சிரேஷ்ட குருவாகிய கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திரியாக்கு.

### பிரதமர் நேருவுக்குப் பாப்பரசரின் செய்தி

2-ம் வத்திக்கான்சங்க சென்ற வருட கூட்டங்களின்பின் தாயகம் திரும்பிய கருதினல் கிருசியாஸ்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## நல்வாசினை வாரம்

### (ஞாயிறு 1-3-64) ஆரம்பமாகிறது

கத்தோலிக்க நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் பத்திரிகைகள் முதலியன கத்தோலிக்கருக்கும், பிறமதத்தினருக்கும் எட்டச்செய்வது மிகவும் அவசியம். இவ்வேலையில் விசேஷ ஊக்கம் அளிப்பதற்காக வருடாவருடம் ஒரு வாரம் இதற்கென ஒதுக்கி, பிற வாரங்களிலும் இவ்வேலையை இக்காலத்தில் துரிதமாகச்செய்யத்திருச்சபை அதிகாரிகள் ஒழுங்கு செய்கின்றனர். இவ்வருடம் கத்தோலிக்க நல்வாசினைவாரம் பங்குனி மாதம் 1-ம் ஞாயிறுதினம் (1-3-64) தொடங்குகின்றது. கர்த்தரின் போதனைகளை நல்வாசினையின்மூலம் பரப்பும் வேலையில் கத்தோலிக்க நேயர்கள் பங்குபெறுமாறு இரந்து வேண்டுகின்றோம்.

**நல்வாசினை வாரவேலை ஏன்?**

கத்தோலிக்க போதனைகளை அறிவதற்கும், நமது வேதத்தை அனுசரிப்பதற்கும் துணைபுரிய வேறு முறைகளும் உண்டெனினும் கத்தோலிக்க வாசினைபோல் துணைபுரியக் கூடியது வேறு இல்லை. குருமார் போதிக்கின்றனர். பள்ளிக்கூடங்களில் சமயஅறிவை உபாத்திமார் படிப்பிக்கின்றனர். ஆனல், இவை போதாது. குருமாரும் உபாத்திமாரும் எங்களுடன் எப்பொழுதும் இருப்பவர் அல்லர். அவர்களுடன் கலந்து ஆலோசிக்க விரும்பும் போதெல்லாம் நாம் அவர்களைக் கண்டுகொள்ள முடியுமா? கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் நாம் பெற்ற அறிவை ஸ்திரப்படுத்துவதற்குத் திடமானமுறை ஒன்றே உண்டு. அது கத்தோலிக்க பிரசுரங்களே. கத்தோலிக்க நூல்களும், சஞ்சிகைகளும், துண்டுப்பிரசுரங்களும், பத்திரிகைகளும் இவ்வேலையில் தவருத துணைகளாகும். இரட்சணியத்துக்கு மிகத்தேவைப்படும் இத்துணைகளை நாம் தேடிக்கொள்ள வேண்டும். இவற்றைச் சேகரித்து உபயோகிப்பதற்கு உதவியாகவே நல்வாசினை வாரத்தைத் திருச்சபை குறித்திருக்கின்றது.

**செய்யவேண்டியது யாது?**

● பல கத்தோலிக்கர் மாதந்தோறும் தமது உழைப்பில் ஒரு சிறு பாகத்தைக் கத்தோலிக்க நூல்கள் வாங்கி வாசித்து, பிறருக்கும் அவற்றைக் கொடுத்துதவி தம் வீட்டிலே ஒரு சிறு கத்தோலிக்க நூல்நிலையத்தை உண்டாக்கிக் கொள்கின்றார்கள். இவ்வாறு செய்வதும் அவர்களுக்கு மாத்திரமன்றி அவர்கள் இனசனர், சிநேகிதர், சந்ததியாருக்குமே பெரும் நன்மை பயப்பதாகும். இப்பழக்கத்தில் நாம் இது வரையும் ஈடுபட்டிராவிடில் இவ்வருட நல்வாசினை வாரம் தொடக்கமாகுதல் ஆரம்பிக்கலாம். மாதந்தோறும் நூல்களை விலைக்கு வாங்குவது சாத்தியமாக இராவிடின் நல்வாசினை வாரத்தில் வருடத்துக்கு ஒரு நூலாகுதல் வாங்கி உபயோகித்து வரலாம்.

● பெரும் நூல்கள் வாசிப்பதை எல்லோரும் விரும்புவதில்லை. பலர் அதற்கு நேரமில்லையென்று சொல்லி விடுவார்கள். நூல்களை வாசிக்க விரும்பாதவர்கள் சிறு சஞ்சிகைகளை வாசிக்கலாம். இலங்கையிலும், இந்தியாவிலும் பல அழகிய கத்தோலிக்க சஞ்சிகைகள் வெளியாகின்றன. பெரும்பாலும் இவை மாதாந்த சஞ்சிகைகளாம். அம்மாதத்துக்குரிய விசேஷவழிபாட்டை அவை விளக்குகின்றன.

● இன்றைய உலகம் பத்திரிகை உலகம் என்று பலர் கூறுகின்றனர். பத்திரிகை வாசியாதவர்கள் ஒருவருமில்லை. தமது நாட்டத்துக்குத் தகுந்த பத்திரிகைகள் சிறுபிள்ளைகளின் கைகளிலும் இருக்கின்றன. ஆகவே, கத்தோலிக்க பெற்றோர் தமது இல்லங்களில் கத்தோலிக்க பத்திரிகை ஒன்றுவது வாங்கி, தாமும்வாசித்து, தமது பிள்ளைகள் கைகளிலும் கொடுத்து, அவர்கள் அப்பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கத்தில் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இளமையிற் கல்வி சிலையில் எழுத்தல்லவா?

● இலங்கையில் வெளிவரும் ஒரேயொருகத்தோலிக்கவாராந்தத்தமிழ்ப் பத்திரிகை எமது சத்தியவேத பாதுகாவலன். இதுஒவ்வொருகத்தோலிக்க தமிழ்க்குடும்பத்திலும் வாரந்தோறும் சென்றடைய வேண்டும். இதில் குறைகள் இருக்கலாம். குறைகளை நிவிர்த்திசெய்ய அதிகாரிகள் தம்மாலியன்ற முயற்சிகள்செய்து வருகின்றனர். இதற்கு ஆதரவு அளித்து உங்களது விருப்பங்களை அதிகாரிகளுக்குத்தெரிவித்து திருத்தங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

● மேலும், கத்தோலிக்க பிரசுரங்கள் வெளியிடுவதிலும், விற்பனை விநியோகம் செய்வதிலும் திருச்சபை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து கத்தோலிக்க நல்வாசினை வேலையில் பங்குபெற நல்மனமுடையவர்கள் யாவருக்கும் இடமிருக்கின்றது. கத்தோலிக்க நல்வாசினையுடன் சம்பந்தப்பட்ட எந்தவேலையையாயினும் கிறீஸ்துநாதர் படிப்பித்த தாழ்மையுடன்செய்து தேவனது போதனையைப் பரப்புவோமாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**பங்குனி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஞா. | தபசுகால 3-ம் ஞாயிறு | [ஊ] |
| 2 | தி. | காலதினம் | [ஊ] |
| 3 | செ. | காலதினம் | [ஊ] |
| 4 | பு. | காலதினம் | [ஊ] |
| 5 | வி. | காலதினம் | [ஊ] |
| 6 | வெ. | காலதினம் | [ஊ] |
| 7 | ச. | காலதினம் | [ஊ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு மாசி மாதம் 29-ந் திகதி**


## எடுத்து வாசியுங்கள்

நாளை பங்குனி 1-ம் திகதி தொடக்கம் 7-ம் திகதி வரையும் கத்தோலிக்க அச்சுப் பிரசுர வாரம். அச்சுப் பிரசுர அப்போஸ்தலத்துவ பணிக்கு மாதாவாகிய திருச்சபை மக்களை விசேஷமாக அழைக்கும் வாரம்.

தற்கால உலகிலே மக்களின் எண்ணங்களையும், கிருத்தியங்களையும் உருவாக்குவதற்கு அச்சுப் பிரசுரங்களிலும் பார்க்கக் கூடிய சக்தி வாய்ந்த எத்தனங்கள் எவையும் இல்லை. பேனு வாளினும் வலிமை வாய்ந்ததாக நிலவும் காலம் இது.

மாபெரிய சக்தியையும், வலிமையையும் தன்னகத்தே கொண்ட அச்சு மொழி ஒன்றில் ஆக்கும் அல்லது அழிக்கும். நன்மைக்கும் தின்மைக்கும் அதுவே ஊற்று.

எண்ணுக்கெட்டாத விதமாக இந்நாட்களில் கெட்ட பிரசுரங்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. ஆன்மீக காரியங்களைப் பழித்து, துவேஷங்களை விதைத்து, அசுத்த இச்சைகளைத் தூண்டி விடும் இப்பிரசுரங்களை வாங்கி ஆவலுடன் வாசித்து அழிந்து போகும் மக்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

கிறிஸ்தவ மக்கள் தீய பிரசுரங்களை வெறுத்து அவைகளை முற்றாக ஒதுக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். ஆனுல், அதுபோதாது. நல்ல பிரசுரங்களை ஆதரிப்பது அவர்களது பெருங் கடமையாகும். அவைகளை வாசிப்பதுடன் நின்று விடாது நல் வாசகத்தைப் பரப்புவது ஒரு சிறந்த அப்போஸ்தலத்துவம் என்ற உண்மையையும் கிறிஸ்தவர்கள் மறந்துவிடக்கூடாது.

நல்வாசகம் தேவ அறிவையும், வேத அறிவையும் அதிகரிப்பிக்கின்றது. விசுவாசத்தில் உறுதிப்படுத்துகின்றது. புண்ணியங்களைப் படிப்பிக்கின்றது. தீமைகளை அகற்றுகின்றது. எம்மைத் தேவனுக்கு உகந்த பிள்ளைகளாக்குகின்றது.

நல்ல பிரசுரங்களில் கத்தோலிக்க பத்திரிகைகளும் அடங்கும். நமது நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்களுள் அதிகமானுேர் கத்தோலிக்க பத்திரிகைகளை ஆதரிப்பதில்லையென்று தான் துக்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். நல்ல மனது இல்லாமை தான் இந்த நிலைமைக்கு முக்கிய காரணம்.

இச்சமயத்தில் அர்ச். 10-ம் பத்திநாத பாப்பரசரின் வாக்கியங்களை நினைவு கூருவோம். அவர் கூறுவதாவது:

"இந்நாட்களிலே ஒரு பலம் பொருந்திய ஆயுதமாக விளங்கும் கத்தோலிக்க பத்திரிகை இல்லாவிடில் நாம் கணக்கற்ற தேவாலயங்களை எழுப்பியும் பயனில்லை; தியானங்களையும், பிரசங்கங்களையும் நிகழ்த்தியும் பயனில்லை; கலாசாலைகளையும், கல்லூரிகளையும் நிறுவியும் பயனில்லை. நமது திருமறையைப் பரப்புவதற்கு நாம் எடுக்கும் மற்றெல்லா முயற்சிகளும் விழலுக்குகிறைத்த நீரெனப் பயனற்றவைகளாகி விடும்...... என் மார்பகத்தே தொங்கும் சிலுவையையும், என் அங்கியையும் அடைவு வைத்தாவது ஒரு கத்தோலிக்க பத்திரிகையை ஆதரிப்பேன்."

இவ்வார்த்தைகளைக் கத்தோலிக்க அச்சுப் பிரசுர வாரத்தில் நாம் ஆழ்ந்து சிந்திப்போம். தீய பிரசுரங்களை ஒதுக்கவும், நல்ல பிரசுரங்களை ஆதரிக்கவும், பரப்பவும் எம்மாலான முயற்சிகளெடுப்போமெனத் தீர்மானம் செய்து அதன்படியே வருடம் முழுவதும் செயலாற்றுவோம்.

"எடுத்துவாசி" என்ற உள்ளொலியைக் கேட்டு வாசித்ததன் மூலம் அர்ச். அகுஸ்தீனுர் வரப்பிரசாதத்தைப்பற்றிய சந்தேகத்தை நிவிர்த்தியாக்கித் தெளிவு பெற்ருர்.

## தபசுகாலத்தின் சந்தோஷம்

**வே. அன்ரனி ஜோண்**

நத்தார்த்தினத்தை ஆயத்தப்படுத்த எப்படி ஆகமனகாலம் எமக்குக் கொடுக்கப்பட்டதோ அவ்வண்ணமே பாஸ்குதினத்தை நன்கு கொண்டாட எமக்குத் தபசுகாலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மானிடனின் வாழ்க்கையிலே இன்பமும் துன்பமும் பகலும் இரவும்போலும் அடிக்கடி மாறிமாறி வரும். இயற்கையிலே கோடைகாலத்துக்குப்பின் மாரிகாலம் வருகிறது; இலையுதிர்காலத்துக்குப்பின் வசந்தகாலம் வருகிறது. இலையுதிர்காலத்தில் மரங்களும் செடிகளும் துன்பத்தில் அமிழ்ந்திருக்கின்றன. மலர்களும் இலைகளும் வாடி வதங்கி நிலத்தில் கிடக்கின்றன. வசந்தகாலத்தில் மரங்களும் செடிகளும் பூத்துக் குலுங்குகின்றன. எங்கள் தாயாகிய திருச்சபையும் இந்தத்தபசுகாலத்தில் யேசுக்கிறிஸ்துநாதரோடு சேர்ந்து அவருடைய நாற்பதுநாள் தபசெபங்களோடும் பாடுகளோடும் பங்குபற்றுகின்றது. அவரோடு சேர்ந்து துக்கத்தில் அமிழ்ந்திருக்கிறது. ஒருநண்பன் தனது ஆருயிர் நண்பனுக்காகத் தியாகம் செய்யும்பொழுது அத்தியாகத்தில் இன்பம் காண்கிருன். திருச்சபை யேசுவின் பத்தினியாய் இருக்கிறது. யேசுவின் பாடுகளில் பங்குபற்றும்பொழுது இன்பம் அடைகிறது. ஓர் உண்மையான நண்பன், தனது ஆருயிர் நண்பனின் துன்பத்திலும் இன்பத்திலும் பங்குபற்றுவதுபோலத் திருச்சபையும் எப்படி இப்பொழுது கிறிஸ்துநாதரின் பாடுகளோடு சேர்ந்து துன்பப்படுகிறதோ அப்படியே இன்னும் அதிகமாக யேசுக்கிறிஸ்துநாதர் மரணத்தைவென்று வெற்றிவீரனுய் வரும் உத்தானத்திலும் பங்குபற்றி யேசுக்கிறிஸ்துநாதரோடு இன்பம் கொண்டாடும். திருச்சபை எங்கள் உண்மையான அன்னை. இயற்கையில் உள்ள நன்மை எதுவோ அதைக் கையாளுகிறது.

### தபசுகாலம்—ஆத்துமத்தின் திருநாளாகும்

உணவு சரீரத்துக்கு உயிர்கொடுக்கிறது. செபமும், தபமும் ஆத்துமத்தின் உணவாகும். செபமும் தபமும் ஆத்துமத்துக்கு உயிர்கொடுக்கிறது. தபசுகாலம் ஆத்துமத்தின் திருநாளாகும். உணவால் சரீரம் வலிமை பெறுவதுபோல, செபத்தாலும், தபத்தாலும் ஆத்துமம் வலிமை அடைகிறது செபத்தாலும் தபத்தாலும் உறுதிப்பட்ட ஆத்துமம் பாவச்சமயத்தில் திடனுய் இருக்கும். உலகம், சரீரம், பிசாசு ஆகிய சத்துராதிகளைச் செபத்தினுலும் தபத்தினுலும் வெல்லலாம். கெட்ட நாட்டங்களையும், இச்சைகளையும் அடக்க உதவிசெய்யும் ஆயுதம் செபமும் தபமுமே. தன்னை அடக்காதவன் உலகை அடக்கமுடியாது. தன்னைஅடக்க உதவிசெய்யும் கருவி—தபமும் செபமுமே. தாவரவஸ்து மிருகவஸ்துக்கு அடங்கி இருக்கிறது. மிருகவஸ்து மனிதனுக்கு அடங்கிஇருக்கிறது. அவ்வண்ணமே மனிதனும் கடவுளுக்கு அடங்கி இருக்கவேண்டும். கீழான பொருள் உயர்ந்தபொருளுக்கு அடங்கி இருக்கிறது, ஆத்துமத்தை விடச் சரீரம் கீழானது. எனவே சரீரம் ஆத்துமத்துக்கு அடங்கி நடக்கவேண்டும். சரீரம் இச்சைகளையும், இன்பங்களையும் அடக்கும் பொழுது ஆத்துமம் வளர்கிறது. சரீர இச்சைகளுக்கு நாம் இடம் கொடுக்கும் பொழுது ஆத்துமத்தின் உயிரைக் கொடுக்கிறேம். இந்தத் தபசுகாலத்திலே ஆத்துமத்துக்கு அதிகம் உணவைக் கொடுப்போமாக.

செப தபங்களைச் செய்வோம். சரீர இச்சை தரும் இன்பத்தைவிடப் பன்மடங்கு பெரிய இன்பத்தைத் தருவது ஆத்துமம், தபம் செய்யும் பொழுது பரிசேயர்களைப் போன்று துக்கமாயிராமல் கிறிஸ்துநாதரைப் போன்று தபத்தில் இன்முகம் காட்டுவோம். இதைப்பார்க்கும் பரம பிதா, கள்வர்கள் களவாடமுடியாத, பூச்சிகள் அரிக்காத மாபெரும் கொடையை உங்களுக்கு அளிப்பார். ஆனந்தபரவசம் அடைவீர்கள்.

## செல்வந்தருக்கு ஒரு வார்த்தை

"கத்தோலிக்கரில் செல்வந்தராய் இருப்பவர்கள் ஒரு விசேஷ பொறுப்புடையவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. தேவன் ஒருவருக்குப் பணத்தைக் கொடுப்பது அவர் உண்டு உடுத்திச் சுகவாழ்வு அனுபவிப்பதற்கு அல்ல என்பதை மனதில் வைத்திருக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இன்று செல்வந்தர்களாய் இருப்பவர்கள் நாளை வறியவர்களாகி விடுவதை நாம் பலமுறைகளிற் கண்டிருக்கின்றேம். தேவன் கொடுத்த செல்வத்தைத் தாமும் மட்டாக அனுபவித்து பிறருடைய துன்பங்களைத் தீர்ப்பதில் கூடியளவு உபயோகிப்பதே செல்வந்தர்களுக்கு அழகு. இது கத்தோலிக்க செல்வந்தர்களுடைய கடமையாகும்" என்று ஆங்கிலநாட்டு பிளிமத் நகர மேற்றிராணியார் தமது மேற்றிராசன செனவின் சென்றடிபோல் சபையில் பேசும்போது கூறினுர் என "யூனிவேர்ஸ்" பத்திரிகை கூறுகின்றது

## அமெரிக்காவில் கத்தோலிக்கர் நல்ல ஜனுதிபதியாகவர முடியாதா?

"முடியும் என நிரூபித்துவிட்டார் காலஞ்சென்ற ஜனுதிபதி ஜோண் கெனெடி" என அமெரிக்காவில் பிலடெல்பியா நகரில் பிறெஸ்பிற்றேரியன் சபைத்தலைவர் வணக்கத்துக்குரிய பிளேக் பாதிரியார் கிறீஸ்தவசபைகளின் தேசிய சங்கத்தின் முக்கிய கூட்டமொன்றில் கூறினுர். கத்தோலிக்கர் உட்பட அமெரிக்காவில் உள்ள சகல கிறீஸ்தவ சபையினரில் சுமார் 5,000 பேர் அங்கே சமுகம் அளித்திருந்தனர். மேலும் அவர் தொடர்ந்து கூறுகையில், "கத்தோலிக்கர் அமெரிக்காவில் நல்ல ஜனுதிபதியாக இருக்கமுடியாது என்று கூறினவர்கள்ஜோண்கெனெடியையோ, அவர் சேர்ந்திருந்த கத்தோலிக்க கிறீஸ்தவ சபையையோ சற்றேனும் அறியாதவர்களே" என்ருர். இக்கூட்டத்தில் ஒரு பேச்சாளராகக் காலஞ்சென்ற ஜனுதிபதி கெனெடியும் நியமிக்கப் பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணீர் சிந்துவதேனம்மா?

(தேவதாயின் 3-ம் வியாகுலம்)

(1)
நசரேத்தூரின் தனிமையிலே
நாதன் யேசுவின் அருகினிலே
நற்சேவை புரிந்தே இன்புற்றே
நாட்களை நலமாய்க் கழிக்கையிலே
ஜெருசலேம் பாஸ்காப் பண்டிகையில்
ஜெகமீட்பர் பின்னால் தங்கிடவே
அருமை மைந்தனைக் காணுமலே
அதிமிக நொந்தே அல்லலுற்றே
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(2)
மூன்று நாட்களாய்த் தேடியலைந்தே
முடிவுறுச் சோக நிலையினிலே
ஊணுறக்கமின்றி உள்மனம் துடிக்க
உந்தன் நெஞ்சம் உலர்ந்தே வாடக்
"கண்மணி யேசுவைக் கண்டீரோ?" எனக்
கண்ணீருடனே காண்போரிடமே
வினவித் திரிகையில் வியாகுலவாளது
ஊடுருவ மனமுடைந்தே நீரும்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(3)
அரும் பொறுப்பேற்றே அமலனுக்கும் எமக்கும்
அன்னையான அம்மா! தாயே!
அசமந்த தனத்தால் இழந்துவிட்ட
பரிசுத்த தனத்தைப் பதைபதைப்புடனே
விரைவாய்த் தேடி அடைந்திடுவோம்
விழாதே நிலைக்க முயன்றிடுவோம்
கர்த்தன் அளித்த கடமைகள் யாவும்
கருத்திற் கொண்டே முடித்திடுவோம்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

— செல்வி ரோஜா சாமுவேல்

[தொடர் சித்திரம்]

## புத்தகம் அளிக்கும் புத்துயிர்

"நம்மை ஞானத்தில் நிறுத்துவதும் உலகதுன்பங்களிடை நம் அமைதியை உண்டுபண்ணுவதுமாகிய ஒரு பொருள் உலகில் உண்டானுல் அது புனித வேதப்புத்தகங்களின் ஆழ்ந்த அறிவும், தியாகமுமாக இருக்க இயலுமேயன்றி வேறு எப்பொருளாகவும் இருக்கவியலாது"—அர்ச். ஜெரோம்.

'நம் ஆன்மவாழ்விற்கான உணவைச் சுவிசேஷத்தில் தேட வேண்டும்.' 'புனித வேதப் புத்தகங்களை விசேஷமாய் சுவிசேஷத்தை தினந்தோறும் கிறீஸ்தவர்கள் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தவேண்டும்' இவை:—15-ம் ஆசீர்வாதப்பரின் வாக்கியங்கள்.

"கத்தோலிக்க பிரசுரங்கள் அன்பின் ஆயுதங்கள்" —23-ம் அருளப்பர்.

பண்டைய கிறீஸ்தவர்கள் சுவிசேஷ வாக்கியம் வரையப்பட்ட உடைகளை அணிந்தனர். சிலர் சுவிசேஷவாக்கியங்களைச் சிமிழ்களில் அடைத்து அணிந்து கொள்வர். கீழத்திசை நாடுகளில் இறந்த குருவின் உடலோடு சுவிசேஷத்தையும் வைத்தனர். கி. பி. 488-ல் சைப்பிரஸ் தீவில் அர்ச். பர்ணபாசின் கல்லறையில் அர்ச். மத்தேயுவின் சுவிசேஷம் எடுக்கப்பட்டது. பொதுச் சங்கம் நடைபெறும்போது அரியணையில் அரங்கேற்றப்பட்டிருந்தது பரிசுத்த சுவிசேஷம்.

"வேதாகமத்தை அறியாதவன் கிறீஸ்துவை அறியாதவன்" —அர்ச். ஜெரோம். இப்படியே கூறிக்கொண்டு போகலாம் ஆனுல்......? இங்கு முக்கியமாய் குறிப்பிடப்பட்டது வேதாகமமே. ஆனுல் இன்னும் அநேக நன்னூல்கள் உண்டு. நாம் அவற்றை விரும்புகிறோமா? இல்லை. வேம்பென வெறுக்கிறோம். பாம்பெனப் பகைக்கிறோம். ஆபாசம் பொறிக்கப்பட்டும், அட்டைகளை அழகு படுத்தியும் வெளிவரும் நூல்களைக் கரும்பென விரும்புகிறோம். 11-ம் பத்திநாதரும் "வாசிப்போரில்லாவிடில் நல்ல அச்சகங்கள் இருந்தும் பயனென்ன?" எனக் கூறியுள்ளார். நாளுக்கு நாள் நாத்திகம் பரவுகின்றது. காரணம் ஆபாசங்களைத் தாங்கிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் அனைத்தையும் பெரியோர் முதல் சிறியோர் வரை விரும்பிக் கற்கின்றனர். இப்படியாயின் கத்தோலிக்க பிரசுரங்கள் மட்டில் நாம்?

"கத்தோலிக்கனுய் இருந்தும் கத்தோலிக்க பிரசுரங்கள் மட்டில் கவலையற்றிருப்பானுகில் அது மடமை" —10-ம் பத்திநாதர். "ஆண்டவரே, நாம் யாரிடம் போவோம்? நித்திய சீவியத்தின் வார்த்தைகள் உம்மிடத்தில் இருக்கின்றன" என்று இராயப்பர் கூறவில்லையா?

இவற்றிலிருந்து கத்தோலிக்க புத்தகங்கள், பத்திரிகைகள் அளிக்கும் புத்துயிரை அறியமுடிகிறதல்லவா? அப்போஸ்தலத்துவத்தில் சிறந்தது அச்சக அப்போஸ்தலத்துவம் என்பது பலரது அபிப்பிராயம். கத். எழுத்தாளரும், பத்திரிகைகளும், புத்தகங்களும் எங்கும் பொலிந்து மிகுந்து சேவைசெய்யவேண்டும். அப்போதே திருச்சபைத் தாய் மேனிலையடைவாள். பூவுலகில் புத்தகங்களும் புத்துயிர் அளிக்கும்.

நாடெங்கும் நன்னூல்கள் பரவ வீடெங்கும் வி[illegible].

— இ. போணு

# பேசும் பேனு

### திருப்பாடுகளின் காட்சி :

வத்தளையில் நடைபெறப் போகும் திருப்பாடுகளின் காட்சிபற்றி முன்னர் குறிப்பிட்டேனல்லவா? கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காட்சிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு வார இறுதியிலும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை மாலைவேளைகளில் காட்சி இடம்பெறும். ஜேர்மனியின் ஒபேரமேர்கு கிராமத்தில் நடைபெறும் உலகப்பிரசித்திபெற்ற திருப்பாடுகளின் காட்சியைத்தழுவித் தயாரிக்கப்பட்டுள்ள, வத்தளை திருப்பாடுகளின் காட்சியைக்காண ரசிகர்கள்கூட்டம் திரளுவதால் முன்கூட்டியே பிரவேசச்சீட்டுகளைப் பதிவுசெய்துகொள்வது நல்லது எனக் காட்சிநிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

### இலங்கையின் கல்வாரி :

காலியிலிருந்து சுமார் 30மைல் தொலைவிலுள்ளது கினிதுமா என்ற கிராமம். பிரதிவருடமும் தபசுகாலத்தில் இந்தக்கிராமத்துக்குவிசுவாசிகள் திரள் திரளாக யாத்திரை செல்வர். கிறீஸ்துவின் சிலுவைப்பாதையை அங்கு தியானிப்பதற் குகந்தமுறையில் ஆளுயரங் கொண்ட உயிரோவியங்களாக நிறுவியுள்ளனர். ஜெருசலேமில் தபசுகாலத்தில் செய்வதுபோலவே இங்கும் கிறீஸ்துவின் கல்வாரிப்பாதையை விசுவாசிகள் பக்தியுடன் தியானித்துச் செல்வர். இவ்வருடமும் யாத்திரை ஆரம்பமாகிவிட்டது. இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதியார் காலிவரை மலிவுகட்டணங்களை ஒழுங்குசெய்துள்ளனர். காலியிலிருந்து இ. போ. ச. பஸ்வண்டிகள் பிரயாணிகளைக் கினிதுமாவுக்குக் கொண்டுசெல்லும். பேசும்பேனுவும் கினிதுமாவுக்கு யாத்திரைசெல்ல எண்ணியுள்ளது என்பதையும் இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

### நகைச் சுவை :

தந்தை: அவன் உன்னை மணம்செய்வதாகக் கூறியபோது என்னைக்காணும்படி அவனிடம் நீ சொல்லவில்லையா?

புத்திரி: சொன்னேன். தான் உங்களைப் பலதடவை வீதியில் சந்தித்திருப்பதால் இப்போதுகாண்பது அவசியமில்லையென்று அவர்கூறினர்.

### உங்களுக்குத் தெரியுமா ?

❋ 1-வது யேம்ஸ்அரசர் காலத்தில் தான் இங்கிலாந்தில் தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்குமுன் தேநீரை இங்கிலாந்துமக்கள் அறியாதவர்களாக இருந்தனர்.

❋ றுேபின்சன் குருசோ என்ற பிரசித்திபெற்ற நவீனத்தை இயற்றியவர் டானியேல் டியோ என்ற பிரசித்திபெற்ற எழுத்தாளராவர். சமுத்திரத்தின் நடுவே, ஆருமற்ற தீவொன்றிலகப்பட்டுப் பலவருடங்கள் துணிவே துணை என்ற தன்னம்பிக்கையுடன் வாழ்ந்த ஒரு வீரனின் சாதனையை இந்நவீனம் விபரிக்கிறது.

### ஏன், எவ்விதம் !

எவ்விதம்என அடிக்கடி கேட்டுக்கொள்பவன் எப்போதும் அலுவல்களில் மூழ்கியவனுயிருப்பான். ஏன், என்று கேட்பவனே விரைவில் அவனது முதலாளி ஆகிவிடுவான்

— "ஒரு பொன்மொழி"

### சைக்கிள் சாதனை :

தமிழ்நாட்டிலிருந்துவந்த ராமக்கிளி என்றவீரர் அவிசாவலைப் பொதுமைதானத்தில் கடந்தவாரம் சைக்கிள்சாதனை ஒன்றை நிகழ்த்தினர். வீரர் ராமக்கிளி முன்னர் யாழ்ப்பாணத்திலும், மற்றும் பலபகுதிகளிலும் தன்சாதனையை நிகழ்த்தியிருப்பது நேயர்கள் அறிந்தி[illegible] காலைதொடக்[illegible] மாலைவரை சுமார் 110 மணித்தியாலங்களாக இடைவிடாது சைக்கிளில் சவாரிசெய்தார். சவாரி செய்துகொண்டே நடனமாடுதல், ஸ்நானம்செய்தல், நெருப்புவளையத்துள் புகுதல், சிறுவர்களைச் சைக்கிளில்இருத்திக் குளிப்பாட்டுதல் முதலிய செயற்கரும் செயல்களையும் சாதித்தார்.

### சிங்களமக்களின் ஆதரவு :

நூற்றுக்குத் 90சதவிகிதமான சிங்கள மக்களைக்கொண்ட அவிசாவலை இந்தத் தமிழ்மகனின் சாதனையை வியந்து பாராட்டியது. பழைய புதிய நகரதலைவர்கள் இருவரும் சைக்கிள் ஓட்டத்துக்கு முழுஆதரவும் தந்தனர். சிங்களமக்கள் இரவுபகலாக, திரள்திரளாக வந்துகூடி இன, மொழி பேதமின்றிச் சைக்கிள் வீரனுக்கு உற்சாகமூட்டினர். அத்துடன் நிதிஉதவியும் தந்தனர்.

### ஒற்றுமையின் அத்திவாரம் :

இச்செயலனைத்தும் தமிழ்-சிங்கள வேற்றுமை பொதுமக்களிடையே இல்லையென்றும், அரசியற்கட்சிகள் தங்கள் நலன்கருதி மக்கள்மனதில் பலவித இனத்துவேஷங்களையும் கிளப்பிவிடுவதாலேயே இனவேறுபாடு, இனவெறியாகமாறிப் பலவிதகசப்பான சம்பவங்கட்குக் காரணமாகி விடுகின்றதென ஒரு சிங்களப்பெரியார் கூறினர். அவர் கூறியதில் சிறிதும் தவறில்லைஎன்பதை இந்தச் சைக்கிள் சாதனையின்போது கண்ணுரக் கண்டுள்ளேன்.

### உடனடியாக நீக்கவேண்டும் :

அண்மையில் நீதிமன்றமொன்றில் ஓர் ஆசிரியர் குற்றவாளியாகக் காணப்பட்டார். சிலதகாத செயல்களைப் புரிந்த அந்தக் குற்றவாளி ஆசிரியத்தொழில் பார்ப்பவரென்று நீதிபதி அறிந்தபோது அவரையறியாமலே ஆக்குரோஷங் கொண்டார். "உன்னைப் போன்றவர்களால் எங்கள் இலங்கையின் வருங்காலப் பிரஜைகளைச் சிறந்தவர்களாகச் சிருட்டிக்க எப்படிமுடியும்? நான்மட்டும் கல்விமந்திரியாயிருப்பின் உன்போன்றவர்களை உடனடியாக வேலையினின்றுநீக்கி வேலையில்லாமல் தவிக்கும் ஆசிரியர்கட்கு அவ்விடத்தைக் கொடுப்பேன்" என்ருர். நீதிபதி கூறியது உண்மைதானே. வேலியே பயிரை மேயலாமா?

### நன்றியறிந்த தோத்திரங்கள்

நான் பலவருடகாலமாகத் தீராநோயினுற் பீடிக்கப்பட்டு வருந்தினேன். இந்த நிலையில் பரிசுத்த சதாசகாயமாதாவை வேண்டி ஒன்பது வார நவநாள் செய்யத் தொடங்கினேன். தீராத நோயாக என்னை வாட்டிய வியாதி படிப்படியாகக் குறைந்தது. ஒன்பது வார நவநாளும் பூர்த்தியாக நோயும் பூரண குணமடைந்தது. பரிசுத்த சதா சகாய மாதாவின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

புத்தளம் ஏ. இ. ராஜக்கோன்.

* * *

மனித உதவிகளால் முடியாத நிலையில் மரணத்துக்குத் தீர்வையிடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட குற்றவாளியையிட்டு நான் பரிசுத்த சதா சகாய மாதாவை விடாப்பிடியாக மன்றாடி வந்தேன். தாயாரின் பேரருளால் அற்புதமாய் அம்மனிதன் ஆயுள் தண்டனை பெற்றுத் தப்பித்துக் கொண்டதனுல் பெரு மகிழ்ச்சியுடன் நேர்த்தியின் படி இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம். க. வ.

* * *

சத்திர வைத்தியத்தின் மூலம்தான் குணப்படுத்த முடியுமென்று வைத்தியரால் கூறப்பட்ட எனது சுகவீனம் காலஞ்சென்ற பரிசுத்த 12-ம் பத்திநாத பாப்புவின் தயவினுல் சத்திர வைத்தியமின்றி நன்கு குணப்பட்டது. இதை அறிக்கையிடப்பிந்தியமைக்கு மன்னிப்புக் கோருகிறேன். ஒரு பக்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சகோதரிகளே, வணக்கம்!

தபசுகாலத்தில் நாம் கைக்கொள்ளக்கூடிய சிறந்தகிருத்தியம் சிலுவைப் பாதையே. யேசுவின் திருப்பாடுகளை நாம் தியானித்தற்கு இது ஒரு மிகச் சிறந்த வழியாகும். யேசுவின்பாதை சிலுவைப்பாதை, மோட்சத்திற்கு வழி காட்டும் பாதையும் அஃதேயாகும். ஆகவே, இத்தபசுகாலத்தின் ஒவ்வொரு நாளிலும் விசேடமாக வெள்ளிவாரங்களிலும் இப்பக்திமுயற்சியைத் தவறாது மேற்கொள்ள முயற்சிப்போமாக.

ரோஜா.

## மாமர நிழலில் மாதர்கள் கூடினால்......!

பாட்டி: எங்கேடியம்மா! உங்களெல்லாரையும்கண்டு அநேக நாளாச்சே, இல்லையா! வருஷம், நத்தார்க் கொண்டாட்டங்களெல்லாம் எப்பவோ முடிஞ்சுபோச்சே. போன ஞாயிற்றுக் கிழமைகூட ஒருத்தியும் இந்தப்பக்கம் திரும்பவில்லையே!

மங்களம்: கோபிச்சுக் கொள்ளாதீங்க பாட்டியம்மா! போனவாரம் நாங்களெல்லாம் தும்பளை லூர்துமாதா திருநாளுக்குப் போய்விட்டோமே.

இராணி: அதுமட்டுமல்ல பாட்டி! இந்தப் பனி, குளிர் தொடங்கியதோ இல்லையோ; எல்லார்வீடும் ஆஸ்பத்திரியாய்ப் போச்சு. ஒரேகாய்ச்சலும், தலையிடியும், இருமலும்என்று ஒவ்வொருத்தரும் அவதிப்பட்டாங்க. விட்டுவிட்டு எங்கே இந்த வட்டமேசை மகாநாட்டுக்கு வருவது?

பாட்டி: அந்தநாளிலே ஒருகுடிநீர் போட்டோமெண்டால் இந்த வியாதிகளெல்லாம் பார்த்துப்பார்த்து ஓடிவிடும். இப்போதான் ஏதோ மிக்சராம், இஞ்செக்ஷனும் என்னவோ இது கலிகாலம்.

மேரி: அது கிடக்கட்டும்! அன்றைக்குத் தும்பளையிலே பார்த்தியோடி ஒரு புதுவிதமானபுடவை எல்லாப் பெண்களும் உடுத்தியிருந்தார்கள். பார்க்க நல்லாயிருந்ததே.

லீலா: கேட்டியா மேரி! இது தபசுகாலமோ இல்லையோ; இந்தவிதக் கதைகள் நம் மகாநாட்டிலே வேண்டாம். பாட்டி! ஏதாவது வேதக்கதைகளாகச் சொல்லுங்கோவன்.

பாட்டி: சரியாய்ச் சொன்னாயெடி! முன்னே எங்களுடைய ஆச்சிஇருந்தாவே. அவ நல்லாகக் கதைகள் சொல்லுவா, அவவுடைய வளவிலே ஏராளமான இலுப்பைமரங்கள், இலுப்பங்கொட்டைகளும் ஏராளம். அதைக் காயப்போட்டு வைத்திருப்பா, உடைப்பதற்குச் சின்னஞ்சிறிசுகள் எல்லாரையும் கூப்பிடுவா. ''கதை சொன்னால்தான்'' என்போம். ஒவ்வொருவருக்கு முன்னால் ஒவ்வொருகொத்துப் போடுவா. கதைகேட்டுக்கொண்டே உடைப்போம்.

மங்களம்: அதிலே எங்களுக்கும் சொல்லுங்களேன் ஒரு கதையை!

பாட்டி! சரி, முன்னே நல்லநல்ல புத்தகங்கள்இருந்ததே, அதிலே ''பூங்காவனம்''என்று ஒருபுத்தகம். அதிலே யேசுநாதரின் திருப்பாடுகள்பற்றி நாம்கேள்விப்படாத எத்தனையோ சம்பவங்கள், யேசுநாதருடைய சிலுவையைப் பற்றியும் சிலவிஷயங்கள். அதிலே படித்ததைத்தான் எங்களுக்குச் சொல்வா.

மேரி: அதைப்பற்றிச் சொல்லுங்கள் பாட்டி.

பாட்டி: உம், ஆதாமையும், ஏவாளையும் சர்வேசுரன் ஏதேன் தோட்டத்திலிருந்து கலைத்துவிட்டாரோ இல்லையோ. அதன் வாயிலில் அக்கினிவாளேந்திய ஒருசம்மனசு காவல்வைக்கப் பட்டாராம். ஆதாம் உலகத்திலே செற்றிவியர்வைசிந்தி, 900 வருடங்கள் சீவித்தார். அவர் கடைசியாக நோயுற்று மாணப்படுக்கையில் கிடந்தார். அவருக்கு ஓர் எண்ணம், ஏதேன் தோட்டத்திலிருந்து நன்மை தீமை அறியும் மரத்தின்கிளை ஒன்றைக் கொண்டுவந்தால் தனக்குச் சுகம் கிடைக்கும் என்ற ஒருநம்பிக்கை. தன் மைந்தனைக் கூப்பிட்டார். விஷயத்தைச்சொல்லி அனுப்பினார். அவனும் அப்படியே சென்றான். தூரத்தில் வந்தபோதே காவல்காத்த சம்மனசைக் கண்டான். சாஷ்டாங்க தெண்டனிட்டுப் பயந்துகொண்டே கூறினான். சம்மனசானவர் மறுத்தார். அவனோ விடாப்பிடியாக மன்றாடினான்.

லீலா: அவனைத்தான் உள்ளே விடாமலிருக்கலாம், ஒருகிளையைவெட்டிக் கொடுத்திருக்கலாமே?

பாட்டி: அவசரக் குடுக்கை! கொஞ்சம்பொறு; அதுதானே சொல்ல வருகிறேன், ஏதேன் தோட்டத்தில் அவன் நுழைய முடியாது. ஆகவே, சம்மனசானவர் ஒருகிளையை வெட்டிக் கொடுத்தார். நன்றிசெலுத்திவிட்டுத் திரும்பிவந்து கொண்டிருந்தான். ஆனால், அவன் வருமுன்னமே ஆதாம் என்பவர் இறந்து கல்லறையில் அடக்கப்பட்டிருந்தார்.

மங்களம்: ஐயோ! பாவம்; அப்புறம்!

பாட்டி: அவன் அக்கிளையை ஆதாமின் தலைமாட்டில் நாட்டிவிட்டான். அதுவளர்ந்து விருட்சமானது. எத்தனையோ வருடங்களின்பின் சில மரந்தறிப்பாளர் இவ்விருட்சத்தை வெட்டிக் கப்பல்செய்ய யோசித்தனர். அவ்விருட்சத்தைவெட்டி எதைச்செய்யப் பார்த்தாலும் ஏனோ அது ஒன்றுக்கும் அசையாதிருந்தது. ஒன்றில் அவர்களது கணக்குவழக்கில் பிழையாகஇருக்கும்; சீவினால் நேராக வரமாட்டாது. இப்படி எத்தனையோ தலைமுறையாக இம்மரம் தேடுவாரற்று ஒருகடற்கரையில் கிடந்தது.

லீலா: நல்லகதையா யிருக்கிறது பாட்டி!

பாட்டி: பின்னர் யேசுநாதரை மரணத்தீர்ப்புக்கு நியமித்தார்களல்லவா! இவரை அறையச் சிலுவையொன்று தேடினர் யூதர். இந்தமரம் அவர்கள் கண்ணில் பட்டது. இந்தச் சபிக்கப்பட்டமரம்தான் இந்தயேசுவுக்குச் சரி என்று எண்ணினர். குறுக்காக ஒரு மாத்லைதமாட்டி இழுத்துவந்து யேசுவைச் சுமக்கச் செய்தனர். யேசுநாதர் சுமக்கவேண்டிய மரமும் ஏதேன் தோட்டத்திலிருந்து தான் கொண்டு வரப்பட்டதோ என்னமோ!

இராணி: இந்தச்சம்பவம் நடந்திருக்கலாம் பாட்டி. ஆனாலும், திருச்சபை இதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

மேரி: அப்புறம் திருச்சிலுவைக்கு என்னாயிற்று. சிலகோவில்களில் திருச்சிலுவைத் துண்டுவைக்கப்பட்ட கதிர்ப்பாத்திரங்கள் தபசுகால வெள்ளிக் கிழமைகளில் ஆராதனைக்கு வைக்கப்பட்டு, முத்திசெய்யக் கொடுக்கப்படுகிறதல்லவா?

இராணி: ஆமாம், அப்புறம் திருச்சிலுவைக்குநடந்த சம்பவங்கள் சரித்திர ஆதாரத்துடன் எழுதப்பட்டுள்ளன.

பாட்டி: அதைச் சொல்லேண்டி! கேட்போம்.

இராணி: யேசுநாதர் அடக்கம் பண்ணப்பட்டபின் திருச்சிலுவையும் கள்வர்கள் அறையப்பட்ட மற்ற இரு சிலுவைகளும் கல்லாரிமலையிலேயே சாய்த்துவிடக் காலகதியில் மண் ஏறுண்டு மறைந்துவிட்டன. புனித எலேனுவதி யேசுவின் திருப்பாடுகளின் பண்டங்களைச் சேகரிக்க ஆவல்கொண்டு ஆராய்ந்தபொழுதுமூன்றுசிலுவைகளும் கண்டெடுக்கப்பட்டன.

மேரி: யேசுநாதருடைய சிலுவையை அப்போ எப்படிக் கண்டுபிடித்தார்கள்?

மங்களம்: கொஞ்சம் பொறு. இராணி சொல்லிக்கொண்டு தானே வருகிறாள்.

இராணி: புனித எலேனுவதி அரசிக்கு ஒருயுக்தி தோன்றியது. மரணத்தருவாயிலிருந்த ஒரு வியாதிக்காரியை அவ்விடத்துக்குக் கொண்டுவரச் செய்தாள். மூன்றுசிலுவைகளும் ஒன்றன்பின் ஒன்றாக அவள்மேல் வைக்கப்பட்டன. மூன்றாவதுசிலுவை வைக்கப்பட்டபோது அவ்வியாதிக்காரி திடீரெனப் பூரண சுகம்பெற்றெழுந்தாள். அதுதான் யேசுவின் சிலுவைஎன்பது தெளிவாயிற்று.

லீலா: அப்புறம்.........

இராணி: திருச்சிலுவையைப் புனிதஎலேனுவதி தன்னுடன்கொண்டு போய்ப் பாதுகாத்தாள். பிற்காலத்தில் அவளதுமைந்தனான கொன்ஸ்தாந்தீன் அரசன் திருச்சிலுவையை ஸ்தாபிக்க ஒருகோவில் அமைத்தான். குறிப்பிட்ட நாளிலே சனங்களெல்லாம் ஊர்வலமாகச்செல்ல அரசன் இராசஉடையணிந்து தானே திருச்சிலுவையைப் பூச்சியமாகச் சுமந்துகொண்டு தேவாலயத்துக்குச் சென்றான். ஆனால் ஆலயமுகப்புக் கதவண்டை சென்றதும் அரசனால் உள்ளேபுக முடியவில்லை. திரும்பவும் திரும்பவும் முயன்றாலும் அவனால் ஓர்அடிகூட முன்னேற முடியவில்லை. அப்பொழுது ஆலயத்திலிருந்த மேற்றிராணிஆண்டகை அங்குவந்தார். ''அரசனே! நம் ஆண்டவர் சிலுவை சுமந்துசெல்கையில் இத்தனை டாம்பீக உடையணிந்திருக்கவில்லையே'' என்றார். அரசன் அவர்கூறியதை உணர்ந்துகொண்டான். அரண்மனைசென்று தன் இராஜஉடைகளைக் களைந்து கந்தையுடையுடன் வந்தான். அப்போது அவனால் சிலுவையைக் கோயிலுள்ளே கொண்டுபோக முடிந்தது.

பாட்டி: சரிதாண்டி; அந்த மேற்றிராணியார் சொன்னது.

இராணி; அத்திருச்சிலுவையைப் பின்னர் பலதுண்டுகளாக்கிப் பலஇடங்களில் பூச்சியமாக வைத்திருக்கிறார்கள்.

மங்களம்: அத்திருச் சிலுவையில் ஒருசிறு துண்டென்றாலும் எங்கள் கோவிலுக்கும் கிடைத்தால் எவ்வளவு பெரிய பாக்கியம் இல்லையா!

பாட்டி: என்ன மங்களம்! இவ்வளவுதானே உனது விசுவாசம். திவ்விய யேசு தம்ஆத்தும சரீரத்தோடே எங்கள் பீடங்களில் எழுந்தருளி யிருக்கிறாரே! நாம் அவரைப் பெற்றுக்கொள்ளும்போது நமது இருதயத்தினுள் வருகிறாரே! இதைவிட வேறெதை நீ பெரும் பாக்கியமாகக் கருதலாம். சம்மனசுகளுக்கும் கிட்டாத பாக்கியமடி.

மங்களம்: மெய்தான் பாட்டி.

மேரி: பாட்டி! நேரமாகிறது. இதோ, மணிகேட்கிறது. இன்றைக்குக் கோவிலில் சிலுவைப்பாதைக்குப் போகவேண்டும்.

இராணி: போய்வருகிறோம் பாட்டி!

(கலைகிறார்கள்)

## வானுலகிலிருந்து வந்த செய்தி

செல்வி பார்பரா யோண்ஸ் பதினைந்து வயது நிரம்பாதவள். நியூயோர்க் நகரிலுள்ள திரு இருதயக் கல்லூரியில் கல்வி கற்கிறாள். இவளது கற்பனையில் உதித்த ஒரு கவிதை அகில உலகிலும் பாராட்டுகளைப் பெற்றுளது.

அந்தக் கல்லூரிச் சஞ்சிகையின் பாதுகாவலராகச் சிஸ்டர் பிரான்சிஸ் கடமையாற்றுகிறாள். இந்தக் கன்னிகை அண்மையில் காலஞ்சென்ற அதிபர் கென்னடிக்குப் புகழ் மாலை சூடும் கவிதையொன்றை ஆக்கித் தரும்படி கல்லூரி மாணவிகளைக் கேட்டிருந்தாள்.

கல்லூரிச் சஞ்சிகையில் தங்கள் கவிதை இடம் பெறவேண்டும். அமரர் கென்னடியைப் புகழும் அந்தக் கவிதையுடன் தங்கள் பெயரும் சிறப்படைய வேண்டும் என உயர் வகுப்பு மாணவிகள் ஒவ்வொருவரும் எண்ணினர்.

அவர்கள் சிந்தனையில் அமரர் கென்னடியைப் பற்றிப் புதுப்புதுக் கருத்துக்களெல்லாம் தோன்றின. ஆயினும் பார்பாராவின் கற்பனையில் ஒரு புதுவிதக் கருத்து தோன்றியது.

அதிபர் கென்னடி அமரர் உலகிலிருந்து தனது அன்பார்ந்த குடும்பத்தினருக்கு கடிதம் வரைவது போன்ற ஒரு கற்பனையை உருவாக்கினாள். அக்கடிதமும் கவிதை ரூபத்தில் வரையப்பட்டது.

சிஸ்டர் பிரான்சீஸ் அக்கவிதையைப் படித்தாள். சிறுமியின் கற்பனையை எண்ணி வியந்தாள். அக்கவிதையையே கலாசாலைச் சஞ்சிகையில் பிரசுரிப்பதெனத் தீர்மானித்தாள்.

அச்சகத்தில் சஞ்சிகை உருவாகிக் கொண்டிருந்த வேளை, கவிதையின் பிரதிகள் சிலவற்றைச் சிஸ்டர் பிரான்சிஸ் பார்பராவின் பெற்றோருக்கு அனுப்பிவைத்தார்.

குடும்ப நண்பரொருவர் அக்கவிதையைப் படித்தார். உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் சிந்தினார். இது கல்லூரிக்குமட்டும் உரிய கவிதை அல்ல, உலகு முழுவதுமுள்ள கென்னடியின் அபிமானிகள் படித்து அனுபவிக்க வேண்டியதொன்று என அபிப்பிராயம் தெரிவித்தார்.

நியூயோர்க் நகரத்தின் பிரபல பத்திரிகை நிருபர்கள் சிலருக்கு இத்தகவல் எட்டியது. அடுத்த நிமிடம் பார்பாராவின் வீட்டைப் பத்திரிகையாளர் குழு ஆக்கிரமித்துக்கொண்டது. ''சக மாணவிகள் எல்லோரும் கென்னடிக்குப் புகழ்மாலை உருவாக்கிக் கொண்டிருந்தனர். அவர்களைவிடப் புரட்சிகரமான ஒருமுறையைக் கையாளவேண்டுமென யான் நினைத்தேன். எனவே கென்னடி பரலோகத்திலிருந்து தனது புதல்வர்கட்கும், மனைவிக்கும் கூறுவதுபோல கவிதைகளை வரைந்தேன்'' என பார்பரா அவர்களிடம் கூறினாள்.

அடுத்த நாள் நியூயோர்க்கில் வெளியான பத்திரிகைகள் எல்லாம் பார்பராவின் பலவித நிழற்படங்களையும் அவளது கவிதையையும் தாங்கி வெளிவந்தன. உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்த அக்கவிதையைப் படித்தவர்கள் எல்லோரும் பார்பராவைப் பாராட்டினர்.

இக்கவிதையைப்பற்றிச் சிலவிமர்சகர்கள் மற்றொரு விளக்கமும் தந்தி

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுலகிலிருந்து............

(மகளிர்மன்றத் தொடர்ச்சி)

ருக்கின்றனர். பதினேந்து வயதுப் பெண்ணன பார்பாராவின் கற்பனையில் இவ்விம் ஒரு கருத்துப் பிறந்திருக்க இயலாது. எனினும் சிறுமி, கென்னடி குடும்பத்தவரைத் தேற்றுவதற்காக எண்ணி இயற்றிய இக்கவிதை அக்கருத்தையும் மறைபொருளாகக் கொண்டது.

அந்த உட்கருத்து யாது? நியூயோக் நகர பத்திரிகையொன்றின் விமர்சகரது வார்த்தைகளையே குறிப்பிடுவோம்.

"பார்பாராவின் கவிதையில் அமரர் கென்னடி தம் அன்புத்துணைவிக்குக் கூறுவதாக அமைந்த இறுதிப் பாடல்களில் உட்கருத்து ஒன்றும் தொனிக்கிறது. ஜாக்குலேன்—கென்னடி இருவருக்கிடையிலும் நிலவிய அன்பு தெய்வீகமானது. அப்புனித அன்பினுல் ஈருடலும் ஒருயுருமாக வாழ்ந்தவர்கள் அத்தம்பதிகள்.

"அமரத்துவம் வாய்ந்த இக்காதல் கென்னடியின் பிரிவினல் சிதறிவிடக் கூடாது. இன்றைய அமெரிக்க நாகரிகச் சுழலில் ஜாக்குலேனும் தன்மானத்தை அலைய விட்டு மறுமணம் செய்ய முனைந்தால் அப்புனித அன்பு பெறுமதியற்றதாகிவிடும்.

"அமரர் கென்னடியும் அதை விரும்பார். எனவே என்றும் தனது ஆவி ஜாக்குலேனுடன் சுற்றிக்கொண்டிருக்குமென்றும், தன் குடும்பப் பொறுப்பை அவள் மறந்து விடக் கூடாதெனவும் கென்னடி கூறுவதாக அல்லவா பார்பாராவின் பாடல் குறிப்பிடுகிறது."

எது எப்படியாயினும் பதினேந்து வயது பார்பாராவின் கவிதை அமரர் கென்னடியின் பக்தர்கள் அத்தனை பேரையும் கவர்ந்து விட்டதென்பது உறுதி. அவ்வரிய கவிதையின் தமிழாக்கம் இதோ:—

# கவிதையின் தமிழாக்கம்

## கென்னடி குடும்பத்தவர்க்கு!

சொல்லாமற் கொள்ளாமல் பிரிந்திடவே நேர்ந்ததுவே
எந்நாளும் இங்கிருந்தே பார்த்துவகை கொள்ளுகின்றேன்!
முந்நாளில் வந்த "பற்றிக்" முத்தங்கள் அனுப்புகின்றான்
மங்காது என் அன்பு மனமுடைந்தே மறுகாதீர்!
கலங்காதீர்! கண்மணிகாள்!

2

கண்ணே! கரோலின்! யான் பிரிந்த நாளினிலே
அன்னை அருகினிலே அழாதிருக்க முயற்சி செய்தே
பண்புடைய சிமாட்டிபோல் யான் பிரிவதையே கண்ணுற்றாய்!
கண்டதுமே உவகை கொண்டே கண்கலங்கப் பெருமையுற்றேன்!
கலங்காதே! குலவிளக்கே!

3

சின்னஞ்சிறிய ஜோணே! நீ பெரிய மனிதன் இப்போ!
சிறப்புடனே அன்னையையும் ஆதரித்தே பாதுகாப்பாய்
போர்வீரன் போல நின்று நீ புரிந்த அஞ்சலிக்கும்
சீருடனே கல்லறையில் நாட்டிவைத்த கொடியதற்கும்
நன்றிபல கூறுகிறேன்! நன்மகனே!

4

ஆசைநிறை ஜாக்குலேன்! "போய்வருவேன்" என்றுனக்கு
நேசமுடன் சொல்லிப்பிரிவதற்கு நேரமுமோ கிடைக்கவில்லை
முத்தான பாலகரை முடிவுவரை நேசித்தே பாதுகாப்பாய்
நித்தியமும் நினைவில் உன் அன்பு நிலைத்திருக்கும்
கவலையேனோ! கலங்காதே:

5

விண்ணுலக வாசலிலே நாமெல்லாம் சேருமட்டும்
விரும்பி நாம் வாழ்ந்ததுபோல் வாழ்க்கையினை ஓட்டிடுவாய்
கண்மணியே! என் அன்பும் பாதுகாப்பும் உனக்குண்டு
கண்ணிற்கு மறைந்தாலும் உன்னருகே நானிருப்பேன்
கலைச்செல்வி! கலங்காதே!

இங்ஙனம்,
உங்கள் அன்புநிறைகென்னடி.

# இலங்கைத் தேசியகுருமடத்தில் ஞானப்பிரகாசியார் தமிழ் கழகவிழா

சென்றவாரம் 13-ம்திகதி வியாழக்கிழமை அம்பிட்டியாவிலுள்ள தேசிய குருமடம் தனது தமிழ்க்கழகத்தின் பாதுகாவலரான ஞானப்பிரகாசியார் தினத்தை வெகுவிமரிசையுடன்கொண்டாடினது. அன்றைய நிகழ்ச்சியின் முதல் அம்சமாக, எம் குருமடத்தின் அதிபர் வண.பிதாபிறெட்றிக் சக்கற்,ஓ. எம். ஐ., அவர்கள் ஞானப்பிரகாசியாரின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்தார். இப்படம் ஒருகுருமாணவரால் வரையப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஞானப்பிரகாசியாரின் திருஉருவப்படம திறந்துவைத்ததும், குருமடஅதிபர் கழகத்துக்கு சேவைசெய்த அன்பர்களுக்குப் பரிசில் வழங்கினர். அதன்பின் கலாநிதி சதாசிவம் வண. ஞானப்பிரகாசியாரைப் பற்றியும், அவரின் தொண்டைப்பற்றியும் ஓர் அரிய சிறந்த சொற்பெருக்காற்றினர். அவர் பேசுகையில், ஞானப்பிரகாசியார் தமிழ்உலகுக்கும், விசேடமாக ஈழத்திக்கும் தமது ஆழ்ந்த அறிவினுலும், ஆன்மாக்களின்மேற்கொண்ட பற்றுதலினுலும் அரும்பெருந் தொண்டுகள் செய்துள்ளார்என்றும் குறிப்பிட்டார். கழகநிகழ்ச்சியின் இறுதியில் தமிழ்க் கழகத்தால் வெளியிடப்பட்ட முதல் நூலாகிய "நற்செய்திஏடு" மிகவும் சிறப்பாக அரங்கேற்றம் செய்யப்பட்டது. கழகவிழாவில் கலந்துகொண்ட தோப்பூர் பேதுருப்பிள்ளை நற்செய்தி ஏடு என்றநூலின் சிறப்பையும், தெள்ளிய இனியநடையையும் புகழ்ந்துரைத்தார். ஈற்றில் தேசியகீதத்தோடு கழகவிழா இனிதே முடிந்தது.

> தன்னடக்கம் நம்மிடம் குடி கொள்ளும்போது, நாமும் பெரிய மனிதர்கள் வரிசையில் இடம் பெறுவோம்.
>
> — கவி தாகூர்

## 1-ம் வருட ஞாபகதினப் பூசை

வண. பிதா
சூசைதாசர் நல்லையா,
ஓ. எம். ஐ. அவர்களின்

## ஞாபகதின துக்கப் பாடற் பூசை

7-3-1964 சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஊர்காவற்றுறை அர்ச். தேவமாதா ஆலயத்தில் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்படும்.

F. X. கிறிஸ்தோப்பர்
குடும்பத்தினர்

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

## 17-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு: 9-3-1902 இறப்பு; 6-3-1947

இலங்கை அரசாங்கப்பகுதியில் கிறேற் வெஸ்ரேன் ஸ்ரேஷன் மாஸ்ரராகச் சேவைபுரிந்த எனது அருமைப் பத்தாவும், எமது பிரிய பிதாவுமான திரு. சிமாம்பிள்ளை ஆரோக்கியநாதர் இவ்வுலகை விட்டு மறைந்த 17-ம் வருடம் 1964-ம் ஆண்டு பங்குனிமாதம் 6-ம்திகதி வெள்ளிக்கிழமை பூர்த்தியாகிறது. அன்று காலை மாதகல் அர்ச். தொம்மையப்பர் கோவிலில் இவரின் ஆத்துமசாந்திக்காக ஒரு துக்கப்பாடற் பூசைநிறை வேறும். இதைக் கண்ணுறும் கிறீஸ்தவர்கள் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மனைவி: ஆ. மரியநாயகி

மக்கள்: டாக்டர் ஈ ஆரோக்கியநாதர், (கண்டி) ஏ. ஈ. நவரெட்ணராஜா, (நீர்பாசனக்கந்தோர், முருங்கன்) ஏ. ஈ. ஐ. ரெட்ணராஜா.

"ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை நினைவு கூருங்கள்."

திருமதி
றெபேக்கா செல்லம்மா அருளப்பு
பரமபதமடைந்த

## முதல் வருட நினைவு

2-3-1964

அன்று தினம் அன்னாரது ஆன்ம சாந்திக்காக, பண்டத்தரிப்பு பத்திமா ஆலயத்தில் துக்கப்பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைக்கண்ணுறும் நேயர்கள் அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கோருகின்றோம்.

"புஷ்ப வாசா," -மக்கள், மருமக்கள்,
பண்டத்தரிப்பு. பேரர்.

## எதிர்பாருங்கள்

தபசுகாலத்தில் விசுவாசிகளின் முக்கியஜெபமாக விளங்குவது சிலுவைப் பாதையே. முதலாவது சிலுவைப் பாதையின் போது நமது இரட்சகரே அப்பாதையில் பிரதான பங்கு கொண்டார். பலஸ்தீனுவுக்கு யாத்திரை செய்வோர் கிறீஸ்துவின் சிலுவைப் பாதைவழியே சென்று இப்பக்தியை அனுசரிக்கமறப்பதில்லை, பரிசுத்த பாப்பரசரும் அண்மையில் பலஸ்தீனுவில் சிலுவையின்பாதை வழியே சென்று தியானித்தார் அல்லவா?

காவலனும் தன் நேயர்களை மானசிகமாக அப்பாதை வழியே அழைத்துச் செல்லவிருக்கின்றான். சிலுவைப்பாதையின் ஒவ்வொரு தலங்கட்கும் வாசகர்களை அழைத்துச் சென்று, அங்கு அன்று நடந்தவைகளையும் அத்தலங்களின் இன்றைய நிலையையும் விபரிக்கவிருக்கின்றான்.

வியா தோலரேசா
அல்லது
சிலுவையின் பாதை வழியே

என்ற கட்டுரை மூலம் அடுத்தவாரக் காவலனை எதிர்பாருங்கள்.

### புத்தக மதிப்புரை

இலங்கைத் தேசியகுருமடத்தில் உள்ள ஞானப்பிரகாசர் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள "நற்செய்தி ஏடுகள்" என்னும்நூல் எல்லாக்கிறிஸ்தவர்கள் கையிலும் இருக்கவேண்டிய நூல். விசேடமாக நான்கு சுவிசேஷங்களையும் பயிலும்கல்லூரிமாணவர்களுக்கும்பாடசாலையிற்பயிலும் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கும் இன்றியமையாத நூல். நான்கு நற்செய்திஏடுகளையும் எளிதில் விளங்கவைக்கும்நூல் "நற்செய்தி ஏடுகள்."

இன்றைய உலகிற்கு யேசுவின் நற்செய்தியை முழங்குவதற்கு உதவியாக இந்நூல் வெளிவருகிறது. விஞ்ஞானம் உச்சநிலையை அடையும் நவீனஉலகிலே — கடவுளைமறந்து, சடப்பொருள்வாதியாக வாழும் உலகிலே தேவனின் வார்த்தையை இன்றைய மனிதன் கேட்டு விளங்கி அதற்கிணங்கவாழ இச்சிறுநூல் உதவியளிக்கும் என்பதில் எவ்விதசந்தேகமும் இல்லை.

இந்நூல் விவிலிய ஆராய்ச்சித்துறையிலே மிகவும்பேர்போன ஆங்கிலஆசிரியர் ஒருவரின் நூலைத்தழுவியே எழுதப்பட்டிருக்கிறது. சிறந்த தமிழ்நடையிலே, செவிக்குஇன்பம்ஊட்டும் விதத்தில் எழுதப்பட்ட சிறந்தநூல் "நற்செய்தி ஏடுகள்."

கிடைக்குமிடம்:

ஞானப்பிரகாசர் கழகம்,
தேசிய குருமடம்,
அம்பிட்டியா, கண்டி.

### நன்றியறிதல்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரி.சதாசகாயமாதா, அர்ச். அன்னம்மா, அர்ச். அந்தோனியார் இவர்களின் விசேஷமன்றாட்டினுலும், நான் நினைத்த காரியம் பூரணமாய் நிறைவேறியது. என்றென்றும் அவர்கட்குப் புகழ் உண்டாவதாக

வலித்தூண்டல் மாதாவின் அடிமை

> செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
>
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாசினையும் கத்தோலிக்கரும்

பி, சவரிமுத்து

மக்களாகப்பிறந்த எங்கள் எல்லோரினும் சரீரம், ஆத்துமம் என்ற இரு பகுதிகள் இருக்கின்றன. சரீரசம்பந்தமான உணவு, உடை, உறக்கம், உல்லாசம், உறைவிடம் போன்ற தேவைகளைப் பூர்த்தியாக்க நாங்கள் எல்லோரும் அல்லும் பகலும் உழைத்து, அரும்பாடுபட்டு வருகிறோம். உலகத்திலுள்ள பல அரசாங்கங்களும் தங்கள் நாட்டுமக்களின் உடல்நலத்தின் பொருட்டு வருடாந்த சுகாதாரதினத்தையோ, சுகாதாரவாரக் கொண்டாட்டங்களையோ நடத்துகின்றன. இவ்விழாக்கள்மூலம் பொதுமக்கள் உடல் சம்பந்தமான அறிவைப்பெற்று ஆரோக்கியமான வாழ்க்கை நடாத்த உந்தப்படுகின்றனர்.

ஆத்துமங்களின் நல்விருத்தியைத் தனது முக்கிய இலக்காகக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையானது வருடத்தில் ஒருநாளுக்கு "நல்வாசினை ஞாயிறு" என்று நாமமிட்டு அத்தினத்தில் நல்வாசினையின் முக்கியத்துவத்தைப்பற்றியும், எப்படிப்பட்ட நூல்களை நாங்கள் வாசித்து எங்கள் உளத்தையும் (மனத்தையும்), ஆத்துமத்தையும் பரிசுத்தமாய் வைத்திருக்க முடியுமென்பதைப் பற்றியும் எடுத்து எமக்கு நன்கு விளக்குகிறது. "நல்வாசினை வாரம்", "நல்வாசினை மாதம்" என்றுகூடச் சில நாடுகளில் திருச்சபை கொண்டாடி வருகிறது.

தற்கால உலகத்தை— விசேஷமாக பெரியநகர்களில் நடைபெறும் வாழ்க்கையை—நாம் உற்று அவதானிக்கும் போது இரண்டு கொடிய சமூகப்பிணிகளை நாம் காணமுடியும். அவை இரண்டும் ஆத்தும சம்பந்தமான நோய்கள் எனலாம். அவை யாவன (1) சினிமாப் படங்கள், (2) ஆபாச நூல்கள். சினிமாப் படங்கள் பல தற்போது ஆத்துமாக்கள் அழிந்து போவதற்குகந்த படுகுழிகளாகக் காட்சியளிக்கின்றன. சினிமாப் படங்களில் பெரும்பாலும் சிற்றின்ப உணர்ச்சிகள், துர்நாட்டங்களைத் தட்டியெழுப்பும் சிந்தனைகள் அமோகமாக இடம் பெறுகின்றன. என்றாலும், எல்லோரும் எல்லா நாட்களிலும் போய்ச் சினிமாப் படங்களைப் பார்ப்பதுமில்லை. பார்க்கச் சந்தர்ப்பங்கள் கிடைப்பதுமில்லை. சினிமா நிலையங்கள் எல்லாக் கிராமங்களிலும் நிறுவப்பட்டிருப்பதுமில்லை.

ஆனால், "அச்சின் நூற்றாண்டு" என்று கூறப்படும் தற்காலத்தில் இலட்சக்கணக்கான நூல்கள், ஆயிரக்கணக்கான பாஷைகளில், உலகில் நானு பாகங்களிலும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. இவைகளும் எல்லோராலும் சொற்பவிலைக்குப் பெறக்கூடிய முறையில் அச்சடிக்கப்பட்டு நாட்டின் பலபாகங்களிலும் விற்பனைக்கு இருக்கின்றன. இவைகளிற் பெரும்பாலானவை ஆபாசநூல்களாயிருக்கின்றன. இவ்வெளியீடுகளோ சிறுவர், வளர்ந்தோர், வாலிபர், வயோதிபர், ஆண்கள், பெண்கள் என்ற பேதமின்றி வாசிக்கத் திறமையுடைய எல்லோரையும் வசப்படுத்தக்கூடிய சக்திவாய்ந்தனவையாக விளங்குகின்றன. தற்காலத்தில் ஆத்துமாக்களை அழிக்கக் கங்கணங்கட்டி நிற்கும் பணியாளர் இவ்வித கெட்ட புத்தகங்கள் எனின் அதுமிகையாகாது.

இதை நன்கறிந்துதான் எமது பரிசுத்த மாதாவாகிய சத்தியதிருச்சபை ஒவ்வொரு வருடமும் தபசுகாலத்தில் விசேஷமாக "நல்வாசினை ஞாயிறு" இயக்கத்தை ஸ்தாபித்துப் பலவித சிறந்தநூல்களை விசேஷமாகச் சமயநூல்களை — சன்மார்க்க நூல்களைப்பரப்ப அரும்பாடுபட்டு வருகின்றது.

நம்தாய் மொழியாம் தமிழிலுள்ள இலக்கியத்தைப் பழையதும், புதியதும்என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இப்போது சிறுவர் இலக்கியம், வளர்ந்தோர் இலக்கியம் என்ற புதுப்பிரிவுகளைப்பற்றியும் தமிழ்கூறும் நல்லுலகில் கேட்டும், வாசித்தும் வருகிறோம். இவற்றிற்கிணங்க எங்கள் சமயத்திலும் **பழைய நூல்கள், புதிய நூல்கள், சிறுவர் இலக்கியம், வளர்ந்தோர் இலக்கியம்** என்பன மலிந்து பொலிந்து விளங்குகின்றன.

**பழைய நூல்கள்** என்ற தலைப்பில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, அப்போஸ்தலர் நடபடிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். வேதபாரகராகச் சிறந்துவாழ்ந்த அர்ச். அகுஸ்தீனர், அர்ச். தோமாஸ் அக்குவினாஸ் என்போர் எழுதிப்போந்த பிரபந்தங்களும், காலத்துக்குக் காலம் பாப்புமார் வெளியிட்ட சுற்றுநிருபங்களும் இவற்றுள் அடங்கும் எனலாம்.

**புதிய நூல்கள்** என்ற தலைப்பில் பலவித தியானநூல்களைக் குறிப்பிடலாம். தொமாஸ் ஏகெம்பிஸ் எழுதிய கிறீஸ்துநாதர் அநுசாரம், வீரமாமுனிவர் எழுதித்தந்த ஒப்பற்ற தேம்பாவணி, "பசாம்" என்று பொதுவாகக் கூறப்படும் யக்கோமே கொன்சால்வேஸ் சுவாமிகள் எழுதிய நமதாண்டவரின் பாடுகளின் வாலாறுகளும், தியானங்களும் என்றநூல் முதலியன இவற்றுள் அடங்கும். விசேஷமாகப் "பசாம்" சிந்தையையும், செவியையும் கவரும் சிறந்த இலக்கியமாக, ஓர் உயிர் ஓவியமாக விளங்குகின்றதன்றோ. சுவிசேஷமும் அதன் விரித்துரையும் என்று அப்பெரியார் எழுதிய நூலும், யேசுபெருமான் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் போதித்த உண்மைகளை எடுத்துத் தெற்றென விளக்குகின்றதன்றோ.

**சிறுவர் இலக்கியம்** என்ற தலைப்பில் விவிலியக் கதைகள் (Bible Stories for Children) அடங்கும். இக்கதைகள் பிள்ளைகளின் கற்பனையை வளர்த்து, சமயஅறிவைப் பெருக்க அருந்துணை புரிகின்றன. புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் சிறுவர்களின் சன்மார்க்கத்தையும், சமயத்தையும் வளர்க்கின்றன.

**வளர்ந்தோர் இலக்கியம்** என்ற தலைப்பில் உலகப்பிரசித்திபெற்ற சமய எழுத்தாளர்களின் நூலைக் குறிப்பிடலாம். இவைகள் ஆங்கிலத்திலும், பிரென்சுப் பாஷையிலும் மலிந்து பொலிந்து விளங்குகின்றன. ஆண்டகை ஷீன், சுவாமிகள் மாட்டின்டேல், லீன், டானியல் டோட் போன்றவர்களின் நூல்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். குருக்களல்லாத நூற்றுக்கணக்கான கத்தோலிக்கரும் அரும்பெரும் நூல்களை எழுதியுள்ளனர். தமிழில் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய நூல்களைத் தமிழர் நன்கறிதல் பயனுடைத்து. தபசுகாலத்தில் பாடப்படும் ஒப்பாரி, புலம்பல், அம்மானை, சிந்தாகுலத்திரட்டு முதலியனவும் சமயஅடிப்படையில் எழுதப்பட்ட நாடகங்களும் வளர்ந்தோர் இலக்கியமெனலாம்.

ஆனால், உண்மைதான் என்ன? குளிக்கப்போய்ச் சேற்றில் புரளுபவர்கள்போல் எங்களில் சிலர் நடக்கிறோம். "சமயத்துறையில் சிறந்தநூல்கள்—கவர்ச்சிகரமான நூல்கள்—இல்லையே" என்ற போலிச்சாட்டைக் கூறிக்கொண்டு மேலே குறிப்பிடப்பட்ட நூல்களைப் பெற்றுவாசிக்க ஒருவித முயற்சியும் செய்யாது தீயபிரசுரங்களை வாசித்து எங்கள் ஆத்துமங்களைப் பாழாக்கி வருகின்றோம்.

கத்தோலிக்க நூல்களையும், சமயப் பத்திரிகைகளையும் கிரமமாகப்பெற்று எங்கள் இல்லங்களில் வாசிப்போர் எத்தனைபேர்? எங்கள் பொருளை உதவி கத்தோலிக்க நூல்களை, பிரசுரங்களை வெளிப்படுத்த முன்வருவோர் எங்களில் எத்தனைபேர்? கத்தோலிக்க நூல்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் பரப்பமுன் வருவோர் எங்களில் எத்தனை பேர்? இவ்வித குறைபாடுகளை எடுத்து எமக்குச் சுட்டிக்காட்டி எங்கள் கடமைகளை எங்களுக்கு விளக்குவதற்கு நல்வாசினை ஞாயிறு இயக்கம் அத்தியாவசியமாயிருக்கிறது — உறுதுணை புரிகின்றது.

கத்தோலிக்கராகிய நாங்கள், எங்கள் கத்தோலிக்க பத்திரிகைகளையும், பிரசுரங்களையும்பரப்ப எவ்வளவு பாரிய கடமை பூண்டவர்களாயிருக்கிறோமென்று சொல்லாமலே விளங்கும். ஆகவே, "பஞ்சசீலம்" என்று கீழே குறிக்கப்படும் ஐவிதமுயற்சிகளை நாங்கள்செய்து எமது சமயப்பற்றை வளர்த்து எமது ஆத்தும இரட்சணியத்தை அடைய முன்வருவோமாக. அவையாவன:

(1) கத்தோலிக்க நூல்களை வாங்கி வாசித்தல்.

(2) கத்தோலிக்க பத்திரிகைகளை வாராந்தம் நமது வீட்டில் பெற்று வாசித்தல்.

(3) கத்தோலிக்க இலவச வாசிகசாலைகளை நிறுவுதலும் அதில் அங்கத்துவம் வகித்தலும்.

(4) கத்தோலிக்க பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்தலும் கூடுமாயின் நூல்களை வெளியிடுதலும்.

(5) குடும்பங்களில் கூடுமாயின் அநுதினமும், கட்டாயமாக ஞாயிற்றுக்கிழமைகளில், எல்லோரும் சேர்ந்து ஞானவாசினை நடத்துதல்.

## பிரதமர் நேரு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மூலமாக பரிசுத்த பாப்பரசர் இந்திய பிரதமர் ஜவஹார்லால் அவர்களுக்கு தமது நன்றியையும், அன்பையும் தெரிவித்து, 2-ம் வத்திக்கான்சங்க பதக்கங்களில் மூன்றை ஓர் அன்பளிப்பாக அனுப்பிவைத்திருக்கின்றார்.

பாப்பரசர் அனுப்பிய செய்தியில், இந்திய அரசாங்கம் பொதுவாகக் கத்தோலிக்க திருச்சபையின் வேலைகள் யாவற்றுக்கும் அளித்துவரும் உற்சாகத்துக்காகவும், விசேஷமாக இவ்வருட முடிவில் பம்பாய் நகரில் நடக்க இருக்கும் அகிலஉலக சற்பிரசாத மகாநாட்டு வைபவத்தின் சிறப்புக்கு அளிக்கும் உதவிக்காகவும் தமது நன்றியைத் தெரிவித்துப் பிரதமருக்கும் நாட்டுமக்கள் யாவருக்கும் தமது ஆசீர்வாதத்தை ஈந்து, சகலருக்கும் சுபசோபனம்கூறி முடிக்கின்றார்.

விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம்ஆண்டு மாசிமாதம் 29-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org